# ஆளுநருக்கு எதிராக தமிழக அரசு வழக்கு

நமது நிருபர்

**புது தில்லி, அக். 31:** 'மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் தாமதப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாடுகள் சட்டவிரோதம்' என அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு ரிட் மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழக அரசுக்கும், ஆளுநர் ஆர்.என். ரவிக்கும் இடையே பல்வேறு விவகாரங்களில் கருத்து மோதல் நீடித்து வருகிறது. இந்நிலையில், ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு செவ்வாய்க்கிழமை மனு தாக்கல் செய்துள்ளது. தமிழக அரசு வழக்குரைஞர் சபரிஷ் சுப்ரமணியன் தாக்கல் செய்துள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காகவும், பரிசீலனைக்காகவும் ஆளுநருக்கு அனுப்பப்பட்ட 12 மசோதாக்கள் நிலுவையில் உள்ளன. அரசியல் சாசனக் கடமையை நிறைவேற்றாமல் தாமதப்படுத்துவது, பரிசீலிக்கத் தவறுவது, செயல்படாமல் இருப்பது, புறக்கணிப்பது போன்ற நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுகிறார்.

அவரது கையொப்பத்துக்காக மாநில அரசால் அனுப்பப்படும் கோப்புகள், உத்தரவுகள், கொள்கைத் திட்டங்கள் ஆகியவற்றையும் அவர் பரிசீலிக்காமல் நிலுவையில் வைத்துள்ளார்.

இது தவிர, அன்றாட கோப்புகள், நியமன உத்தரவுகள், ஆள்சேர்ப்பு உத்தரவுக்கு ஒப்புதல், ஊழல் தொடர்புடைய முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி அளித்தல் ஆகிய விவகாரங்களிலும் ஆளுநர் அனுமதி அளிக்காமல் உள்ளார். இது அரசு நிர்வாகத்தை முடக்குவதாகவும், மாநில அரசுடன் ஒத்துழைக்காத விரோத மனப்பான்மையை உருவாக்குவதாகவும் உள்ளது.

ஆளுநரின் இந்தச் செயல்பாடுகளைத் தன்னிச்சையானதாகவும், அரசியல் சாசனத்துக்கு எதிரானதாகவும், சட்டவிரோதம் எனவும் அறிவிக்க வேண்டும்.

மேலும், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட மசோதாக்கள், கோப்புகள், அரசு உத்தரவுகள் ஆகியவற்றை ஆளுநர் முடித்துவைக்க காலக்கெடுவை நிர்ணயிக்க உத்தரவிட வேண்டும். தமிழக அரசும், சட்டப்பேரவையும் சந்தித்துவரும் பிரச்னைகளைத் தீர்க்கவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, அரசியலமைப்பின்படி, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட மாநில ஆளுநர், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைப் பரிசீலிப்பதை நியாயமற்ற வகையிலும், அதிகமாகவும் தாமதிப்பதன் மூலம், சட்டப்பேரவை அதன் சட்டமியற்றும் கடமைகளைச் செயல்படுத்தும் திறனைத் தடுத்து, இடையூறு செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு தன்னை ஓர் அரசியல் போட்டியாளராக நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு -316-இன் படி நியமிக்கப்பட வேண்டிய தமிழ்நாடு அரசுப் பணி தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் நியமனங்களுக்கான பல்வேறு விண்ணப்பங்கள் ஆளுநரிடம் நிலுவையில் உள்ளன.

புலன் விசாரணை அதிகாரிகள் ஊழலுக்கு முகாந்திர ஆதாரம் இருப்பதைக் கண்டறிந்து, வழக்குத் தொடர அனுமதி கோரிய நிலையில், அதற்கான ஒப்புதலைத் தர மறுப்பதன் மூலம் ஆளுநர் அரசியல் உள்நோக்கத்துடன் செயல்படுகிறார். இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை அனுமதி கோரலும் இடம் பெற்றுள்ளது. இந்த விசாரணைக்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்தது.

ஆளுநரின் செயலற்ற தன்மை மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைமைக்கும் மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் இடையே அரசியலமைப்புச்சட்ட முடக்கத்துக்குக் காரணமாகியுள்ளது. தனது அரசியலமைப்புச் செயல்பாடுகளை மேற்கொள்ளாததன் மூலம் குடிமக்களின் தீர்ப்புடன் ஆளுநர் விளையாடி வருகிறார். இந்த விவகாரத்தில் அவருக்குத் தகுந்த உத்தரவுகளை உச்சநீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

## மசோதாக்கள் ஒப்புதல் தாமத பிரச்னை



'ஆளுநர் அலுவலகத்தில் நிலுவையில் இருந்துவரும் அனைத்து மசோதாக்கள், கோப்புகள், அரசு உத்தரவுகள் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்துவைக்க ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும்'.

– தமிழக அரசு

## பஞ்சாப் அரசும் வழக்கு

பஞ்சாப் மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு எதிராக அந்த மாநிலத்தில் ஆட்சி செய்யும் ஆம் ஆத்மி அரசும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது.

பஞ்சாப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 27 மசோதாக்களில் 22-க்கு மட்டும் ஆளுநர் புரோஹித் அனுமதி அளித்துள்ளார். மூன்று பண மசோதாக்களைத் தாக்கல் செய்ய பஞ்சாப் அரசு சிறப்புப் பேரவைக் கூட்டத்தொடரை கூட்ட அண்மையில் முடிவு செய்தது. இந்த மசோதாக்களைத் தாக்கல் செய்ய ஆளுநர் அனுமதி அளிக்காததால் பேரவைக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விவகாரத்தை உச்சநீதிமன்றத்தில் முறையிடப் போவதாக பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் தெரிவித்திருந்தார். இந்நிலையில், ஆளுநருக்கு எதிராக பஞ்சாப் அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு, பஞ்சாப் மாநில அரசுகளின் மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் ஒன்றாகச் சேர்த்து விசாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 'எனது இளைய பாரதம்' திட்டம்: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



'என் மண்; என் தேசம்' முன்னெடுப்பின் மூலம் பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட மண்ணைக் கொண்டு தில்லியில் கட்டப்படவுள்ள நினைவக கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டி, நெற்றியில் திலகமிட்டுக் கொண்ட பிரதமர் மோடி.

**புது தில்லி, அக். 31:** இளைஞர்கள் மேம்பாட்டுக்கான 'எனது இளையபாரதம்' திட்டத்தை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, '21-ஆம் நூற்றாண்டில் நாட்டைக் கட்டமைப்பதில் இத்திட்டம் முக்கியப் பங்கு வகிக்கும்' என்றார்.

நாட்டுக்காக உயிர் நீத்த வீரர், வீராங்கனைகளுக்கு அஞ்சலி செலுத்த கடந்த 2 மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த 'என் மண்; என் தேசம்' முன்னெடுப்பின் நிறைவு விழா மற்றும் 75-ஆவது சுதந்திர தினத்தையொட்டிய 'சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின்' 1,000-ஆவது நாள் கொண்டாட்ட விழா தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட மண்ணைக் கொண்டு 'இந்தியா கேட்' அருகே 'அமிர்த மஹோத்சவம்' நினைவகம் மற்றும் 'அமிர்த வாடிகா' தோட்டம் கட்டப்பட உள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். மேலும், கட்டுமானத்துக்குப் பயன்படுத்தப் படவுள்ள மண்ணைக் கொண்டு நெற்றியில் பிரதமர் மோடி திலகமிட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக இளைஞர்கள் தலைமையிலான வளர்ச்சியில் அரசு கூடுதல் கவனம் செலுத்தவும், நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களை முக்கியப் பங்களிப்பாளர்களாக மாற்றவும் கொண்டுவரப்பட்டுள்ள 'எனது இளைய பாரதம்' திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், பிரதமர் மோடி ஆற்றிய உரையில், 'இங்கு அமைக்கப்பட உள்ள நினைவுச் சின்னம் மற்றும் தோட்டம் மூலம் இந்த வரலாற்று நிகழ்வை வரும் தலைமுறையினர் நினைவுகூர்வர். மேலும், 21-ஆம் நூற்றாண்டில் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் 'எனது இளைய பாரதம்' திட்டம் முக்கியப் பங்கு வகிக்கும்' என்றார்.

# சாலை விபத்துகளில் தமிழகம் முதலிடம்

## உயிரிழப்பில் உத்தர பிரதேசம்

**புது தில்லி, அக். 31:** நாட்டிலேயே அதிக சாலை விபத்துகள் நிகழ்ந்த மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு தமிழகத்தில் 64,105 சாலை விபத்துகள் பதிவாகி உள்ளன.

உயிரிழப்புகளில் உத்தர பிரதேசம் முதலிடத்திலும், அடுத்தபடியாக தமிழகமும் உள்ளன.

நாட்டில் ஒரு மணி நேரத்துக்கு சராசரியாக 53 சாலை விபத்துகள் ஏற்படுகின்றன என மத்திய நெடுஞ்சாலைப் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நாடு முழுவதும் 4,61,312 சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன. இதில் 1,68,491 பேர் உயிரிழந்தனர். 4,36,366 பேர் காயமடைந்தனர்.

2021-ஐ ஒப்பிடுகையில், விபத்துகளின் எண்ணிக்கை 11.9 சதவீதமும், உயிரிழப்பு 9.4 சதவீதமும், காயமடைவது 15.3 சதவீதமும் அதிகரித்துள்ளது.

இரு சக்கர வாகனங்கள் மூலம் ஏற்படும் சாலை விபத்துகள், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை இரண்டாம் ஆண்டாக அதிகமாக உள்ளது.

2024-இல் விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய நெடுஞ்சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### 2022 சாலை விபத்துகள்...

| சாலைகள் | விபத்துகள் | உயிரிழப்பு | அதிகரிப்பு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலை | 1,51,997 | 61,038 | 36.2 |
| மாநில நெடுஞ்சாலை | 1,06,682 | 41,012 | 24.3 |
| பிற சாலைகள் | 2,02,633 | 66441 | 39.4 |



### விபத்துகளில் முதல் 10 மாநிலங்கள்

| மாநிலங்கள் | விபத்துகள் | உயிரிழப்பு |
|---|---|---|
| தமிழ்நாடு | 64,105 | 17,884 |
| மத்திய பிரதேசம் | 54,432 | 13,427 |
| கேரளம் | 43,910 | 4,317 |
| உத்தர பிரதேசம் | 41,746 | 22,595 |
| கர்நாடகம் | 39,762 | 11,702 |
| மகாராஷ்டிரம் | 33,383 | 15,224 |
| ராஜஸ்தான் | 23,614 | 11,104 |
| தெலங்கானா | 21,619 | 7,559 |
| ஆந்திர பிரதேசம் | 21,249 | 8,293 |
| குஜராத் | 15,751 | 7,618 |

EVA STALIN

# ரூ.7,100 கோடி புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி

## 22,000 பேருக்கு வேலைவாய்ப்பு

**சென்னை, அக். 31:** தமிழகத்தில் 22,000 பேருக்கு புதிய வேலை வாய்ப்புகளை அளிக்கும் ரூ. 7,100 கோடி மதிப்பிலான புதிய தொழில் திட்டங்களுக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளிக்கப்பட்டது.

16 ஆண்டுகளுக்குப் பிறகு துறைமுக மேம்பாட்டுக்கான கொள்கை மாற்றியமைக்கப்பட்டு வகுக்கப்பட்டுள்ள புதிய கொள்கைக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் தரப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நிதி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு முதலீடுகளைச் செய்ய ஆர்வமாக இருக்கின்றன. அந்த வகையில், புதிய தொழில் நிறுவனங்களும், ஏற்கெனவே தமிழ்நாட்டில் ஆலைகளை நிறுவியுள்ளவர்களும் புதிய முதலீடுகளை உருவாக்க அரசுக்கு முன்மொழிவுகளை அளித்தனர். அவர்களுக்கான தொகுப்புச் சலுகைகளை வழங்க அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தொகுப்புச் சலுகைகளைப் பெறுவதற்கு 8 நிறுவனங்களுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செவ்வாய்க்கிழமை
சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம்.

**ரூ. 7,108 கோடி முதலீடு:** செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, கோவை போன்ற மாவட்டங்களில் ரூ. 7,108 கோடி முதலீட்டில் 22,536 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கக் கூடிய திட்டங்களுக்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியின் மூலமாக, மின்சார வாகனங்களுக்கான உதிரி பாகங்கள், காலணி உற்பத்தி, விண்வெளி, பாதுகாப்பு பொருள்கள் தயாரிப்பு, கண்ணாடி பொருள்கள், ஆராய்ச்சி, மேம்பாட்டுத் துறைகளில் புதிய முதலீடுகள் செய்யப்பட உள்ளன. இந்த நிறுவனங்களில் செயின்ட் கோபைன் உள்ளிட்ட நிறுவனங்கள் முக்கியமானவை.

**16 ஆண்டுகளுக்குப் பிறகு புதிய கொள்கை:** மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கையானது அமைச்சரவையின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. மாநிலத்தில் 1,076 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரை உள்ளது. 4 பெரிய துறைமுகங்களும், 17 சிறிய துறைமுகங்களும் உள்ளன. தொழில் வளர்ச்சிக்கு மிகச்சிறந்த துறைமுக உட்கட்டமைப்பு தேவையாக இருக்கிறது.

இதை மனதில்கொண்டு, 'தமிழ்நாடு மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை 2023' வடிவமைக்கப்பட்டுள்ளது.

2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுதுறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இப்போது நமது துறைமுகங்கள் பெரிய அளவில் உருப்பெற வேண்டுமென்ற நோக்கத்தில், மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆண்டுகளில் கடல்சார் வணிகத்தில் முதலீடுகளை ஈர்க்க மிகப்பெரிய போட்டி இருந்து வருகிறது. அண்டை மாநிலமான ஆந்திரத்தில் துறைமுகங்களை விரிவுபடுத்தவும், முதலீடுகளைச் செய்யவும் பெரிய போட்டி இருந்து வருகிறது. இந்தத் துறையில் தனியார் துறையின் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், இத்தகைய துறைமுக மேம்பாட்டுக் கொள்கை அவசியமாக இருக்கிறது.

**கொள்கை உருவாக்கம்:** மகாராஷ்டிரம், ஆந்திரம், ஒடிஸா போன்ற மாநிலங்களில் இப்போது நடைமுறையில் உள்ள கொள்கைகளை முழுமையாக ஆய்வு செய்து, கொள்கையிலுள்ள கூறுகளை உள்வாங்கிக் கொண்டு இப்போது இருக்கக் கூடிய போட்டித் தன்மையை எதிர்கொண்டு தமிழ்நாட்டில் துறைமுக கட்டமைப்பை வலுப்படுத்த கொள்கையை உருவாக்கியுள்ளோம்.

கப்பல் மறுசுழற்சி, மிதவைக் கலன்கள் கட்டுதல், துறைமுகங்களை மேம்படுத்துதல், துறைமுகங்களை வர்த்தக ரீதியில் சாத்தியமாக்குவது, வியாபாரத்தை எளிதாக்குதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி கொள்கையை உருவாக்கியுள்ளோம். ஆழ்கடல் துறைமுகங்களின் வளர்ச்சிக்கும் பெரிய கப்பல்களை நிறுத்தக் கூடிய வசதிகளுக்கும் மிகப்பெரிய அளவில் முதலீடு தேவைப்படுகிறது. இதை தனியார்-அரசின் பங்களிப்பு மூலமாகவே செய்ய முடியும்.

**நீர் விளையாட்டுகள்:** இதைக் கருத்தில் கொண்டு, கடற்பரப்புகளின் முன்புறப் பகுதிகளை நீண்டகால குத்தகைக்கு விடுவது, நீர் விளையாட்டுகளுக்கு அனுமதி தருவது, சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளும் பசுமை துறைமுகத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகிய கூறுகளை உள்ளடக்கி கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

EVA STALIN IAS

# ஊசலாடும் எட்டு உயிர்கள்!

இந்திய முன்னாள் கடற்படை அதிகாரிகள் எட்டு பேருக்கு, கத்தார் நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருக்கிறது. அவர்கள் மீது உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டனர். உளவுக் குற்றச்சாட்டு என்பதால் அதன் விவரங்கள் எதுவும் முழுமையாக வெளியிடப்படவில்லை. கசிந்திருக்கும் தகவலின்படி, இஸ்ரேலுக்காக உளவு பார்த்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

தூக்குதண்டனை விதிக்கப்பட்டிருக்கும் எட்டு முன்னாள் இந்தியக் கடற்படை அதிகாரிகளும், பணி ஓய்வுக்குப் பிறகு அல் தாரா குளோபல் டெக்னாலஜிஸ் அண்ட் கன்சல்டன்சி சர்வீசஸ் என்கிற பாதுகாப்புத் தொடர்பான சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தனர். ராயல் ஓமன் விமானப் படையில் ஸ்குவாட்ரன்ஸ் லீடராக இருந்து பணி ஓய்வு பெற்ற ஓமன் நாட்டைச் சேர்ந்த கமிஸ் அல் – அஜ்மி என்பவரால் நடத்தப்பட்ட அந்த நிறுவனம், கத்தார் நாட்டுக் கடற்படைக்கு பயிற்சி, பராமரிப்பு சேவைகளை வழங்கி வந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் கேப்டன் நவ்ஜீத் சிங் கில், கேப்டன் வீரேந்திரகுமார் வர்மா, கேப்டன் சௌரவ் வசிஷ்ட், கமாண்டர் அமித் நாக்பால், கமாண்டர் பூர்ணேந்து திவாரி, கமாண்டர் சுகுநாகர் பகலா, கமாண்டர் சஞ்சீவ் குப்தா, கடற்படை வீரர் ராகேஷ் கோபகுமார் ஆகிய எட்டு பேரும் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக தாரா குளோபல் நிறுவனத்தில் பணியாற்றி வருபவர்கள். கைது செய்யப்பட்ட எட்டு இந்தியர்களுடன், அந்த நிறுவனத்தை நடத்தி வந்த கமிஸ் அல் – அஜ்மியும் கைது செய்யப்பட்டார் என்றாலும், கடந்த நவம்பர் மாதம் அவர் எந்தக் காரணமும் தெரிவிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த வழக்கின் பின்னணி குறித்து விவாதிக்கப்படுவது அந்த எட்டு பேரின் நலனுக்கு ஊறு விளைவிக்கக் கூடும் என்பதை உணர்ந்து, உணர்ச்சிவசப்படாமல் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும் என்கிற இந்திய வெளியுறவு அலுவலகத்தின் வேண்டுகோள் நியாயமானது. இன்னொரு நாட்டின் நீதிபரிபாலன முறையில் நாம் நேரடியாகத் தலையிட முடியாது என்பதையும் கருத்தில் கொண்டுதான், இது குறித்து விவாதிக்க முடியும்.

கத்தார் கடற்படையில் இத்தாலிய நாட்டின் நீர்மூழ்கிக் கப்பல்களை இணைக்கும் ரகசியத் திட்டத்தை தாரா குளோபல் நிறுவனம் மேற்பார்வை செய்து வந்தது. அந்த அதிநவீன நீர்மூழ்கி கப்பல்களின் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ள பிற நாடுகள் ஆர்வம் காட்டுவது இயல்பு என்பதால் விவரங்கள் அந்நிய நாட்டுக்குப் பகிரப்பட்டன என்பது குற்றச்சாட்டாக இருக்கக்கூடும்.

இதற்கு முன்னர் வெளிநாடுகளில் கொலை, கொள்ளை, போதை மருந்துக் கடத்தல் உள்ளிட்ட பல குற்றங்களுக்காக இந்தியர்களுக்கு தண்டனைவழங்கப்பட்டிருந்தாலும், அரிதாகவே உளவு பார்ப்புக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் சிறையில் உளவு பார்த்ததாக குற்றம்சாட்டப்பட்டு குல்பூஷண் ஜாதவ் என்பவர், தூக்குதண்டனைக்குக் காத்திருக்கிறார் என்றாலும், நட்பு நாடு ஒன்றில் எட்டு இந்தியர்கள் உளவு பார்த்த குற்றத்துக்காகத் தூக்கு தண்டனை பெற்றிருப்பது இதுதான் முதல் தடவை.

கத்தார் நாட்டில் அந்த எட்டு பேரும் மேல்முறையீடு செய்வதற்கு இந்தியா உதவலாமே தவிர, சர்வதேச நீதிமன்றத்தில், குல்பூஷண் ஜாதவ் வழக்கைப்போல முறையிட முடியாது. தனியார் நிறுவனத்தில் பணியாற்றிய அந்த அதிகாரிகளின் செயல்பாடுகள், ராஜாங்க ரீதியான முறைகேடு அல்ல. அவர்களது கைது, விசாரணை, சிறையடைப்பு உள்ளிட்டவை முறையாகவே நடந்திருக்கின்றன.

அவர்கள் மன்னிப்புக் கோர முடியாது. அவர்கள் மன்னிப்புக் கோரினால், அது குற்றத்தை ஏற்றுக் கொள்வதாகிவிடும். இந்தப் பிரச்னையில் இந்தியாவுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு, ராஜாங்க ரீதியாகக் கத்தார் அரசை அணுகி, சுமுகமாகத் தீர்வு காண்பது மட்டுமாக இருக்கும்.

இந்தியாவுக்கும் கத்தாருக்கும் இடையே மிகவும் நெருக்கமான ராஜாங்க உறவு நிலவுகிறது. 2008-இல் பிரதமர் மன்மோகன் சிங்கும், 2016-இல் பிரதமர் நரேந்திர மோடியும் கத்தாருக்கு அரசமுறைப் பயணம் மேற்கொண்டனர் என்றால், மார்ச் 2015-இல் கத்தாரின் அமீரான ஷேக் தமீம் பின் ஹமது அல் தானி இந்தியாவுக்கு விஜயம் செய்தார். கத்தார் நாட்டு ஆட்சிப்பணி அதிகாரிகள் இந்தியாவில்தான் பயிற்சி பெறுகிறார்கள். இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறது.

இருநாடுகளுக்கும் இடையேயான 15 பில்லியன் டாலர் வர்த்தகத்தில், இந்தியாவின் இறக்குமதி பங்கு 80%. நமது எரிவாயுத் தேவையில் 42% கத்தாரில் இருந்து பெறப்படுகிறது. அதேபோல கத்தாரின் இறக்குமதிகளிலும் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கிறது.

27 லட்சம் மக்கள்தொகையுள்ள கத்தாரில், எட்டு லட்சம் பேர் இந்தியர்கள். மொத்த மக்கள்தொகையின் எண்ணிக்கையில் கால் பங்கு அளவில் இந்தியர்கள் அங்கே பணிபுரிகிறார்கள். வணிகர்களாகவும், வர்த்தக நிறுவனத் தலைவர்களாகவும் அந்த நாட்டு அரசுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்கள் பலர்.

தண்டனை வழங்கப்பட்டிருப்பவர்களின் மேல்முறையீட்டுக்கு வழிகோலுவதும், அது இயலாத நிலையில், கத்தார் அமீருடனான தனது நெருக்கத்தைப் பயன்படுத்தி அவர்களை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுவதும் பிரதமர் நரேந்திர மோடியின் கையில்தான் இருக்கிறது. அமீர் மனது வைத்தால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிக்கவும் முடியும்!

# 8–ஆவது பேலன் தோர் விருது வென்றார் லயோனல் மெஸ்ஸி


**பாரீஸ், அக். 31:** நடப்பாண்டு பேலன் தோர் விருது நிகழ்ச்சியில், சிறந்த வீரர் விருதை ஆர்ஜென்டீனாவின் லயோனல் மெஸ்ஸியும், சிறந்த வீராங்கனை விருதை ஸ்பெயினின் அய்டானா பொன்மட்டியும் வென்றனர்.

'பிரான்ஸ் ஃபுட்பால்' எனப்படும், பாரீஸில் வெளிவரும் வார இதழ், இந்த பிரபல விருதை 67–ஆவது ஆண்டாக வழங்கியது.

இதில் மெஸ்ஸி இந்த விருதை வெல்வது இது 8–ஆவது முறையாகும். இதற்கு முன் 2009, 2010, 2011, 2012, 2015, 2019, 2021 ஆகிய ஆண்டுகளில் அவர் இந்த விருதை வென்றிருக்கிறார்.

ஆர்ஜென்டீன அணிக்கு உலகக் கோப்பை வென்று தந்ததன் அடிப்படையில் அவர் இந்த விருதுக்குத் தேர்வாகியிருக்கிறார். இதற்காக அவருடன், நார்வே வீரர் எர்லிங் ஹாலந்த், பிரான்ஸின் கிலியன் பாபே ஆகியோர் போட்டியில் இருந்தனர். மெஸ்ஸியை தவிர வேறு எவரும் இத்தனை முறை இந்த விருது வென்றதில்லை. போர்ச்சுகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ 5 முறை இதை வென்றிருக்கிறார்.





மறுபுறம், ஸ்பெயின் மகளிர் கால்பந்து அணி நடப்பாண்டில் உலகக் கோப்பை வெல்வதில் முக்கியப் பங்காற்றியதன் பேரில் அய்டானா பொன்மட்டிக்கு விருது கிடைத்துள்ளது. ஆஸ்திரேலியாவின் சாம் கெர், ஸ்பெயினின் சல்மா பராலுவேலோ ஆகியோரை பின்னுக்குத் தள்ளி இந்த விருதை பொன்மட்டி தனக்கு சொந்தமாக்கியிருக்கிறார்.

இதர பிரிவுகளில், சிறந்த 21 வயதுக்கு உள்பட்ட வீரருக்கான விருதை இங்கிலாந்தின் ஜூட் பெலிங்கமும், சிறந்த கோல்கீப்பருக்கான விருதை ஆர்ஜென்டீனாவின் எமிலியானோ மார்டினெஸும், அதிக கோலடித்ததற்கான விருதை நார்வேயின் எர்லிங் ஹாலந்தும், மனிதநேயமிக்க வீரருக்கான விருதை வினிகஸ் ஜூனியரும் (பிரேஸில்) வெல்ல, சிறந்த கிளப்புக்கான விருதை மான்செஸ்டர் சிட்டி மற்றும் மகளிர் எஃப்சி பார்சிலோனா அணிகளும் வென்றன.

EVA STALIN IAS ACADEMY



# சாலைப் பாதிப்புகளைத் தெரிவிக்க 'நம்ம சாலை' செயலி..!

தமிழ்நாட்டில் சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை மக்கள் நெடுஞ்சாலைத் துறைக்குத் தெரிவிக்கும் வகையில், 'நம்ம சாலை செயலி' நவ. 1-ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

தமிழ்நாட்டில் பொருளாதார, சமூக வளர்ச்சிக்குத் திறமையான சாலை உள்கட்டமைப்பு அவசியம். கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், புதிய வாழ்வாதார வாய்ப்புகளைத் திறந்து, சந்தைகள், மருத்துவமனைகள், பள்ளிகளை அணுகுவதை எளிதாக்குவதிலும் சாலை உட்கட்டமைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது.

புதிய சாலைகள், பாலங்கள் அமைத்தல், சாலைகள்,பாலங்களைப்பராமரித்தல்,கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை,சிறுதுறைமுகங்கள் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், துறை வாயிலாக தரமான, பாதுகாப்பான சாலை கட்டமைப்பை சிறந்த முறையில் உருவாக்கி பராமரித்து வருகிறது.

இந்த நிலையில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 622.19 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட சாலைகளையும், செயல்படுத்தப்படவுள்ள திட்டப் பணிகளும் தொடங்கிவைக்கப்படஉள்ளன.

**பள்ளங்களற்ற சாலை...**

விபத்துகளில்லா மாநிலம் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்கு திட்டத்தைச் செயல்படுத்த, 'பள்ளங்களற்ற சாலை' என்ற இலக்கை அடைவற்கு ஏதுவாக, பொதுமக்களின் துணையோடு கண்டறியப்பட்ட சாலைப் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரி செய்யப்படும் என்றும் திட்டத்தைச் செயல்படுத்த 'கைப்பேசி செயலி' உருவாக்கப்படும் என்று சட்டப் பேரவையில் 2023-24-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது அறிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், தற்போது 'நம்ம சாலை' என்ற இணையத்தின் அடிப்படையிலான மென்பொருள் மற்றும் கைப்பேசி செயலி ரூ.15 லட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிக்கப்படும் சாலைகளில் உள்ள பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் கைப்பேசி செயலி வாயிலாக புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்யலாம்.

இந்த விவரம் அந்தச் சாலைக்குரிய பொறியாளருக்கு செயலி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு, குறித்த காலக்கெடுவுக்குள் பள்ளங்களைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் செயலியில் அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்படும். இதனால், பள்ளங்கள் உடனுக்குடன் சீர் செய்யப்படுவது மட்டுமல்லாமல், பொதுமக்களின் தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படும்.

**நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களைத் தொடர்பு கொள்வது இனி எளிது**

நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயனர் குழு (சி.யு.ஜி.) முறையில் நிரந்தர கைப்பேசி எண் வழங்கப்பட்டு அந்த எண் வாயிலாக எந்த ஒரு அலுவலரையும் எளிதில் தொடர்பு கொள்ள வழிவகை செய்யப்படும் என்று 2023-24-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது அறிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், நெடுஞ்சாலைத் துறையில் கட்டுமானம், பராமரிப்பு அலகில் உள்ள 44 கோட்டப் பொறியாளர்கள், 190 உதவிக் கோட்ட பொறியாளர்கள், 266 உதவிப் பொறியாளர்களுக்கு நிரந்தர கைப்பேசி எண்கள் வழங்கப்பட உள்ளன.

இதன்மூலம், சாலைகள் தொடர்பான அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகள், சாலை பாதுகாப்பு, பழுதுகள் தொடர்பாக பொது மக்கள், பயனாளர்கள் தொடர்புகொள்ளுதல், பேரிடர் காலங்களில் தகவல் பரிமாற்றங்களுக்கு நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை எளிதில் தொடர்பு கொள்ள இயலும்.

இதனால் சாலைகள் தொடர்பான அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகள், சாலை பாதுகாப்பு, சாலைகளில் ஏற்படும் பழுதுகள் தொடர்பாக பொதுமக்கள், பயனாளர்கள் தொடர்பு கொள்ளுதல், பேரிடர் காலங்களில் தகவல் பரிமாற்றங்களுக்கு நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள பொறியாளர்களுக்கு நிரந்தர தொலைபேசி எண்களும் வழங்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் மூன்று முக்கிய சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**மேலூர்- திருப்பத்தூர் சாலை**

மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் ரூ.204.07 கோடி செலவில் இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட மேலூர்-திருப்பத்தூர் சாலை (வேட்டங்குடி பறவைகள் சரணாலயப் பகுதி தவிர) அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் திருப்பத்தூர் நகருக்கு புறவழிச்சாலை, 63 குறு, 4 சிறு பாலங்கள், மழைநீர் வடிகால்கள், சாலைப் பாதுகாப்பை உறுதி செய்ய தெருவிளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள், பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர், கழிவறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால், மதுரையிலிருந்து காரைக்குடி செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். மேலும், திருப்பத்தூருக்கு அருகில் உள்ள முக்கிய புனிதத்தலமான பிள்ளையார்பட்டிக்கு பிற நகரங்களில் இருந்து வரும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். மதுரை மாவட்டத்தில் உள்ள 9-க்கும் மேற்பட்ட கிராமங்கள், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும்.

**தஞ்சாவூர்- மன்னார்குடி சாலை**

தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் ரூ.198.65 கோடி செலவில் இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட தஞ்சாவூர் - மன்னார்குடி சாலை (வடுவூர் பறவைகள் சரணாலய பகுதி தவிர) அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், 44 குறு, 4 சிறு பாலங்கள், மழைநீர் வடிகால்கள், சாலைப் பாதுகாப்பை உறுதி செய்ய தெருவிளக்குகள், சூரிய மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள், பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர், கழிவறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சாலை மேம்பாட்டினால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 7 கிராமங்கள், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 8 கிராமங்கள் பயன்பெறும். இந்தக் கிராமங்களில் இருந்து விவசாய விளைப்பொருள்களை எளிதாக எடுத்துச்செல்ல முடியும். தஞ்சாவூர், திருவாரூரில் அமைந்துள்ள மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் மக்கள் எளிதாகச் செல்ல முடியும்.

**விருத்தாச்சலம்- உளுந்தூர்பேட்டை சாலை**

கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ரூ.219.47 கோடி செலவில் இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட விருத்தாசலம் உளுந்தூர்பேட்டை சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில், மங்களம்பேட்டை நகருக்கு புறவழிச்சாலை, மழைநீர் வடிகால்கள், 46 குறு, 8 சிறு பாலங்கள், சாலைப் பாதுகாப்பை உறுதி செய்ய தெருவிளக்குகள், சூரிய மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள், பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர், கழிவறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சாலை அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டதாலும் மங்கலம்பேட்டை புறவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளதாலும் கனரக வாகனங்களின் போக்குவரத்து நெரிசல், பயண நேரம் குறைந்துள்ளது. விருத்தாசலத்தில் இருந்து சென்னை செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துக்கு கனரக வாகனங்கள் வந்து செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள பீங்கான் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கான போக்குவரத்து மேம்பட்டுள்ளது. கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் உள்ள 27-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 1,63,000-க்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறுவர்.

மேற்கண்ட திட்டங்களையும், பணிகளையும் சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் புதன்கிழமை (நவ.1) காலை 11 மணியளவில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறும் விழாவில், இளைஞர் நலன், விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

விழாவில் நெடுஞ்சாலைகள்- சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், கட்டுமானம்-பாராமரிப்புத் துறையின் தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்ட தலைமைப் பொறியாளர் எம்.கே. செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

Activate W
Go to Settings

EVA STALIN IAS